குருவிட பிரதேச சபையி - 2023

----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குருவிட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, குருவிட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | குருவிட கேட்போர்கூடம் நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,972,698 தொகை காணிகள் மற்றும் கட்டிடங்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வேன் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 04 நிர்மாண வேலைகளின் நிர்மாண வேலைகள் கிரயம் ரூபா 9,432,969 தொகை இரு தடவைகள் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 02 நிர்மாண வேலைகளின் கிரயம் ரூபா 28,016,924 தொகை மிகையாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | கூட்டுத்தொகை ரூபா 22,671,941 தொகைக்கான 03 கட்டிடங்கள், காணி மற்றும் தளபாடங்கள் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 02 வங்கி நடைமுறைக் கணக்குகளில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 5,292,338 இற்கான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாமல் வங்கி இணக்கக் கூற்றில் வழியில் பணம் என சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | முத்திரைக் கட்டணம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்தல் கணக்கீட்டுக் கொள்கையாக காணப்பட்ட போதிலும், 2021 ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 9,568,563 இற்கான முத்திரைக் கட்டணம் 2023 ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | செலவு கடன் கொடுத்தோர் ரூபா 3,905,484 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | கூட்டுத்தொகை ரூபா 407,590 தொகைக்கான 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காகிதாகிகள் மற்றும் வீதி விளக்குகள் இறுதியிருப்பு கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 200,000 இற்கான மருந்துகள் இருப்பொன்று மற்றும் 2022 ஆண்டில் கிடைத்த ஆயுர்வேத மானியம் ரூபா 103,334 தொகை பெற வேண்டிய விடயங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | நிலுவை கடையறை வாடகை ரூபா 496,000 தொகை பெற வேண்டியவை என கணக்கீடு செய்திருக்காததுடன், வீதவரி கட்டண முற்பெறுவனவு ரூபா 400,523 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஓ) | 07 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் படி மீதிகள் மற்றும் துணைப் பதிவேட்டு மீதிகளிடையே ரூபா 21,967,998 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இணக்கமின்மை தீர்க்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 343,070,438 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் விரிவான அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வுகள் சமர்ப்பித்திருக்கவில்லை. | தகவல்கள் பெற்றுக்கொண்டு அட்டவணைகள் தயாரிப்பதற்கும் பதிவேடுகளை நாளதுவரை ஆக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என. | கொடுக்கல் வாங்கல்கள் உரியவாறு பதிவு செய்யப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 371(5) படி, 2009 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை 27 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,597,900 முற்பணங்கள் இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணைக் குழுவினால் வழங்கியிருந்த பரிந்துரையின் படி முற்பணங்களை தீர்க்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அத் தொகையினை விரைவாக தீர்த்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | தாபனக் கோவையின் அத்தியாயம் XIV பிரிவு 12.3 இற்கு முரணாக சபையின் செயலாளரினால் மாற்றிய படி பெற்றுக்கொண்டு கடமைகளுக்காக அரசாங்க வாகனங்களையும் பயன்படுத்தப்பட்டிருந்தது. | மாற்றிய படி பெற்றுக்கொண்டிருந்த போதிலும் நிரந்தர போக்குவரத்து கொடுப்பனவொன்று பெற்றுக்கொண்டிருக்கவில்லை . அதன்படி, பதவியணி உத்தியோகத்தர் ஒருவர் என்ற வகையில் அரச வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. | தாபனக் கோவையின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 57,657,816 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 63,358,707 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 8,039,737 | 9,315,237 | 9,186,695 | 10,520,615 | 7,428,955 | 8,418,956 | 5,930,941 | 11,262,318 |
| வாடகை | 9,620,290 | 9,824,503 | 10,004,605 | 1,604,925 | 9,096,117 | 9,004,731 | 8,184,746 | 1,905,021 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,311,800 | 3,150,854 | 3,150,854 | - | 2,204,250 | 2,780,474 | 2,780,474 | - |
| ஏனைய வருமானங்கள் | 3,500,000 | 9,386,486 | 6,052,682 | 2,752,573 | 11,288,780 | 17,431,240 | 14,210,857 | 236,468 |
| | 23,471,827 | 31,677,080 | 28,394,836 | 14,878,113 | 30,018,102 | 37,635,401 | 31,107,018 | 13,403,807 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களை பழமையான நிலுவை வீதவரி ரூபா 2,883,436 தொகை மற்றும் 3 வருடங்களை விட பழமையான நிலுவை ஏக்கர் வரி ரூபா 729,261 தொகை அறவிடப்பட்ட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கைத்தொழில் வரி, வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்காக கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ஒரே தடவையில் பெறும் ரூபா 626,450 தொகையினை செலுத்துவதற்கு, உடன்படிக்கை மேற்கொள்வதற்கு மற்றும் நிலுவை வாடகை ரூபா 101,200 தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத கடையறை ஒன்று மற்றும் ரூபா 200,000 இற்கான ஒரே தடவையில் செலுத்தும் பணம் செலுத்தாத கடையறை ஒன்றினை உரித்தாக்கியிருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொண்டிருக்காத கடையறைகளை மீண்டும் டென்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய அறிக்கை கிடைத்த பின்னர் அதன்படி நடவடிக்கை எடுப்பேன். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும், கடையறைகளை உரித்தாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கிரிஎல்ல முன்பள்ளி ஒன்றின் அனைத்து பராமரிப்பு மற்றும் நிர்வாக அலுவல்கள் சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பிள்ளைகளிடம் அறவீடு செய்யும் மாதாந்தக் கட்டணம் ரூபா 44,800 தொகை சபை நிதியத்திற்கு செலவு வைக்காமல் முன்பள்ளி ஆசிரிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | சம்பளம் பெற்றுக்கொள்ளாத ஆசிரியைகளுக்கு பெற்றோரினால் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் முதல் பெற்றோரிடம் பணம் சேகரிக்கப்படுவதில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நாமல்தெனிய சுற்றுலா இளைப்பாறு இல்லம் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக திறக்கப்படாது இருந்தமையால் 2021 ஏப்ரல் முதல் 2022 ஒக்தோபர் வரை செலுத்திய வாடகை ரூபா 813,960 தொகையை விடுவிக்கும் படி குத்தகையாளரினால் கோரப்பட்டிருந்த போதிலும் இதுவரை ஆளுனரினால் அதற்கான அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. பின்னர் பெறுகை செய்முறைக்கு புறம்பாக 2022 ஏப்ரல் முதல் ஒரு வருடத்திற்கு அந்த குத்தகையாளருக்கு சுற்றுலா இளைப்பாறு இல்லத்தை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | இந்த காலப் பகுதியில் இளைப்பாறு இல்லம் உண்மையாகவே திறக்கப்படவில்லை என தகவல்கள் அழைக்கப்பட்டுள்ளது. | வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். வருமானம் பதிவழித்தல் முறையான அங்கீகாரத்துடன் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பலகைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று 2023 ஆண்டின் போது மேற்கொண்டிருக்கவில்லை. | அவ்வாறான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படவில்லை. | வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 609 பர்சஸ் அளவான காணியை பாதுகாப்பதற்கு போதிய ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. அதில் ஒரு காணியில் பயிர் செய்வதற்கும், இன்னொரு காணியில் முன்பள்ளி ஒன்று நடாத்துவதற்கும் அங்கீகாரமின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் விடயங்களை விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வர்த்தக தொடர்கட்டிடம் ஒன்றில் காணப்பட்ட கேட்போர் கூடம் நிர்மாணிக்கும் போது ரூபா 3,188,688 தொகை ஒன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. அதனை ரூபா 34,793,520 தொகை செலவிடப்பட்டு 2022 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அடிப்படை தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமையினால் 2023 திசெம்பர் அளவிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | போதிய பதில் சமர்ப்பித்திருக்கவில்லை. | மிகைக் கொடுப்பனவு அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் சொத்துக்களை பயன்படுத்தாமல் வைத்தல் கூடாது. |
| (ஆ) | 33 பாதைகளின் திருத்த வேலைகளுக்காக ரூபா 1,912,932 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது 7 பாதைகளில் இந்த விடயம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br>அதே போல் அப் பாதை உட்பட மேலும் 3 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 299,974 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மிகைக் கொடுப்பனவுகளில் இருந்து ரூபா 402,414 தொகை அறவிடப்பட்டதுடன், மீதியை அறவீடு செய்யப்படும். | மிகைக் கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 33 பாதைகளின் திருத்த வேலைகளின் போது கற்கள் போக்குவரத்துக்காக செலுத்தியிருந்த ரூபா 759,560 இற்கான சரியான | கொரோனா தொற்றுநோய் காரணமாக மிகவும் தூர இடங்களில் இருந்து கற்கள் கொள்வனவு செய்ய | போக்குவரத்து தூரம் மற்றும் பில் பத்திரங்கள் காணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தன்மையை உறுதிப்படுத்தி கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | நேரிட்டது. | |

### 3.3 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சாக்கடை பவுசர் 2022 ஆண்டின் போது ரூபா 784,110 தொகை செலுத்தி திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2023 மே அளவிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | சாக்கடைகளை போடுவதற்கு இடமொன்று காணப்படாமையால் சாக்கடை சேவை வழங்குவதற்கு முடியாமல் உள்ளது. அதனை நீர்ப் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |